**செ. கு. எண்: 029** **நாள்: 23.02.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

இரங்கல் செய்தி – 23.2.2019

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். ராஜேந்திரன் அவர்கள் இன்று அதிகாலை (23.2.2019) சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த மன வேதனையும், பெரும் துயரமும் அடைந்தேன்.

விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினராக திறம்பட பணியாற்றிய திரு. எஸ். ராஜேந்திரன் அவர்கள் கட்சித் தலைமையின் மீது பற்றும், பாசமும், கழக கொள்கைகளின் மீது உறுதியும் கொண்டவர்.

திரு. ராஜேந்திரன் பல ஆண்டுகளாக பொது வாழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு மக்களின் நலன்களுக்காக பாடுபட்டவர். அனைவரிடமும் விருப்பு, வெறுப்பின்றி அன்புடன் பழகும் பண்பாளர். இவர் கட்சியில் பல பொறுப்புகளை வகித்தவர். தொகுதி மக்களின் பேரன்பைப் பெற்றவர். திரு. ராஜேந்திரன் அவர்களின் இழப்பு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், தொகுதி மக்களுக்கும் பேரிழப்பாகும்.

திரு. ராஜேந்திரன் அவர்களை இழந்து வாடும் அவரது மனைவிக்கும், குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், அவரது நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ராஜேந்திரன் அவர்களின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**